

விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க செயற்குழு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் S.I.R ( வாக்காளர் பட்டியல் சிறப்பு சீராய்வு ஆய்வு) பணிகள் குறித்து கழக துணை பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். உடன் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, ம.ஜெயச்சந்திரன், டி.என்.முருகன், இரா.கற்பகம், கார்த்திகேயன், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை.சுரேஷ், மோ.தேன்மொழி, டி.செல்வராஜ், எம்.அப்துல்சலாம், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.

### ‘மக்களைத் தேடி மருத்துவம்’ 2.5 கோடியாவது பயனாளி! தஞ்சாவூர் மாவட்டம்

# பிள்ளையார் நத்தம் ஊராட்சி - தென்னங்குடியில் மனோன்மணி என்பவருக்கு மருத்துவப் பெட்டகம்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – கோவி. செழியன் வழங்கினர்!

தஞ்சாவூர், நவ. 18 -

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு வட்டம் தென்னங்குடி ஊராட்சியில் ரூ.3.27 கோடி செலவில் 3 புதிய மருத்துவ கட்டடங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் ஆகியோர் திறந்து வைத்து மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் ரூபாய் 2 கோடியே 50 இலட்சத்து ஒன்றாவது பயனாளிக்கு மருத்துவ பெட்டகம் நேற்று (17.11.2025) வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன், தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி (தஞ்சாவூர்), சுப.தமிழழகன் (கும்பகோணம்), தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு வட்டம் தென்னங்குடி ஊராட்சியில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் தென்னங்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடமும், ஒரத்தநாடு வட்டத்தில் ரூ.1.27 கோடி மதிப்பீட்டில் வாண்டையார் இருப்பு அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடமும், வடக்கூரில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அரசு ஆரம்ப சுகாதாரநிலையத்தில் கூடுதல் கட்டிடமும் என மொத்தம் ரூ.3.27 கோடி செலவில் 3 புதிய மருத்துவ கட்டடங்கள் இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கப்பட்டுள்ளது. மேலும், மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் ரூபாய் 2 கோடியே 50 இலட்சத்து ஒன்றாவது பயனாளியாக தஞ்சாவூர் மாவட்டம், பிள்ளையார்நத்தம் கிராமத்தை சேர்ந்த திருமதி.மனோன்மணி, என்பவருக்கு மருந்து பெட்டகம் வழங்கப்பட்டது.

இத்திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் உதித்த சீர்மிகு திட்டம் "மக்களைத் தேடி மருத்துவம்" உலகத்திற்கே முன்மாதிரியான திட்டமாகும். மருத்துவத்தை தேடி மக்கள் செல்வார்கள் ஆனால் தமிழ்நாட்டில் மக்களைத் தேடி மருத்துவத்தை வரவைத்தவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். உலகளவில் 6070% மக்கள் தொற்றா நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களை காப்பாற்றும் உன்னதமான திட்டம் மக்களைத்தேடி மருத்துவம் ஆகும்.

கடந்த 2021 ஆகஸ்டு திங்கள் 5 ஆம் நாள் கிருஷ்ணகிரி, சாமணப்பள்ளியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட மக்களைத் தேடி மருத்துவத் திட்டம் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் பயனாளிகளுக்கு இல்லங்களில் வழங்கப்படும் சேவைகள் உயர் இரத்த அழுத்த நோய் சிகிச்சைக்கான மருந்துகளை வழங்குதல், நீரிழிவு நோய் சிகிச்சைக்கான மருந்துகளை வழங்குதல், உயர் இரத்த அழுத்த மற்றும் நீரிழிவுநோய் சிகிச்சைக்கான மருந்துகளை வழங்குதல், நோய் ஆதரவு சிகிச்சைக்கான சேவைகள் இயன்முறை சிகிச்சைக்கான சேவைகள், சிறுநீரக நோய்க்கு சுய டயாலிஸ் செய்து கொள்வதற்குத் தேவையான பைகள் வழங்குதல் போன்ற சிறப்பு மருத்துவ சேவை இத்திட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

25.09.2024 அன்று அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகரில் நடைபெற்ற 79வது ஐக்கிய நாடுகள் பொதுசபையின் போது ஐக்கிய நாடுகள் அமைப்பு “United Nation Interagency Task Force Award 2024” உலக நாடுகள் அளவில் தமிழ்நாட்டில் “மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்” சிறப்புற செயல்படுத்தியதற்கு விருது அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 05.08.2021 அன்று கிருஷ்ணகிரி, சாமணப்பள்ளியில் திட்டத்தின் தொடக்கமாக திருமதி.சரோஜாம்மாள் என்ற பயனாளிக்கும், செங்கல்பட்டு, சித்தலப்பாக்கத்தில் 50 இலட்சமாவது பயனாளியாக திருமதி. பாஞ்சாலை என்பவருக்கும் வழங்கினார்கள்.

மேலும், மதுரை மையிட்டாம்பட்டியில் 60 இலட்சமாவது பயனாளி பெரியசாமியும், நாமக்கல், மேலூரில் 75 இலட்சமாவது பயனாளி திருமதி.நல்லம்மாள், சைதாப்பேட்டை, கோதாமேட்டில் 80 இலட்சமாவது பயனாளி திருமதி. சாந்தி, விருகம்பாக்கத்தில் 90 இலட்சமாவது பயனாளி‘ திருமதி. ஜெனிதா பேகம் என்பவருக்கும் வழங்கப்பட்டதை தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருச்சி மாவட்டம், சன்னாசிப்பட்டியில் 1 கோடியாவது பயனாளி திருமதி. மீனாட்சிக்கும், ஈரோடு மாவட்டம், நஞ்சனாபுரத்தில் 2 கோடியாவது பயனாளி திருமதி.சுந்தராம்பாள் என்பருக்கும் வழங்கியதை தொடர்ந்து, மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் ரூபாய் 2 கோடியே 50 இலட்சத்து ஒன்றாவது பயனாளியாக தஞ்சாவூர் மாவட்டம், பிள்ளை யார் நத்தம் கிராமத்தை சேர்ந்த திருமதி.மனோன்மணி, என்பவருக்கு மருந்து பெட்டகம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, பாம்பு கடி மற்றும் நாய்கடிக்கு மருந்தும், இதயம் காப்போம் திட்டத்தின் கீழ் மாரடைப்புக்கு மருந்தும் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இன்று கிடைக்கப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் ஆகியோர் தஞ்சாவூர் இராசாமிராசுதார் அரசு மருத்துவமனையில் ரூபாய் 12 கோடி மதிப்பில் 100 படுக்கை வசதிகள் கொண்ட மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல பிரிவு மற்றும் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 23.7 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள 50 படுக்கை வசதி கொண்ட தீவிர சிகிச்சை மைய பிரிவினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (சுகாதாரம்) மரு. செந்தில்குமார், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. பூவதி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.கலைவாணி, மாவட்ட துணை இயக்குநர் (காசநோய்) மரு.மாதவி, மாவட்ட துணை இயக்குநர் (தொழுநோய்) மரு. குணசீலன், நகர நல அலுவலர் நமச்சிவாயம், சதய விழா குழுத் தலைவர் செல்வம் மற்றும் மருத்துவ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நவ.22ல் வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகிறது!

சென்னை, நவ.18-

தென்கிழக்கு வங்கக்கடலில் வரும் நவம்பர் 22 ஆம் தேதி மேலும் ஒரு குறைந்த காற்றழுத்தப் பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இலங்கை கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, மேற்கு வடமேற்கு திசையில் மெதுவாக நகர்ந்து செல்லக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியின் காரைக்கால் பகுதிகளிலும் கனமுதல் மிக கனமழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவையிலும் நேற்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது. கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தென்காசி மற்றும் தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, தென்கிழக்கு வங்கக்கடலில் வரும் நவம்பர் 22ஆம் தேதி மேலும் ஒரு குறைந்த காற்றழுத்தப் பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக, வானிலை மையம் தெரிவித்துள்ளது.

புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதியானது, மேற்கு வடமேற்கு நோக்கி நகர்ந்து அடுத்த 48 மணி நேரத்தில் மேலும் வலுப்பெறக்கூடும் என்றும் வானிலை மையம் கணித்துள்ளது.

### தமிழ்நாட்டில் வேளாண் பட்டம் – பட்டயம் பெற்ற இளைஞர்கள் சுய தொழில் தொடங்கி பயன்பெறும் வகையில்

# முதலமைச்சரின் உழவர் நலச் சேவை மையங்கள் அமைத்தல்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிக்கை!

சென்னை, நவ. 18 -



தமிழ்நாட்டில் வேளாண் பட்டம் மற்றும் பட்டயம் பெற்ற இளைஞர்கள் சுய தொழில் தொடங்கி பயன் பெறும் வகையில் ‘முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள்’ அமைப்பது குறித்து வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அறிக்கை வருமாறு :-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, 2025-26ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கையில் வேளாண் பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு முடித்த இளைஞர்களின் படிப்பறிவும், தொழில்நுட்பத்திறனும் விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் 1,000 முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக 42 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டத்தினை விரைந்து செயல்படுத்தும் விதமாக, வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், வேளாண்மைப் பொறியியல் ஆகிய துறைகளின் மூலம் பல்வேறு துரித நடவடிக்கைகள் மேற்கொளப்பட்டு வருகின்றன. முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் அமைக்கும் திட்டம் குறித்து அறிவிப்பு வெளியானவுடன் வேளாண் பட்டம் மற்றும் பட்டயம் பெற்ற இளைஞர்கள் மத்தியில் இத்திட்டம் பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது. இதுவரை 1768 இளைஞர்கள் விண்ணப்பித்துள்ளனர், இவற்றுள் வங்கிகளில் கடன்பெறும் வகையில் 973 விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வங்கிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டு 413 இளைஞர்கள் வங்கிக்கடன் பெற்றுள்ளனர். விண்ணப்பித்துள்ள ஏனைய இளைஞர்களுக்கும் வங்கிக்கடன் பெறுவதற்காகன நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், தகுதியின் அடிப்படையில் பயனாளர்களை தேர்வு செய்திட ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மாவட்ட அளவிலான தேர்வுக்குழுவும், வேளாண்மை இயக்குநர் தலைமையில் மாநில அளவிலான தேர்வுக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை 248 தகுதியான பயனாளர்களுக்கு மாவட்ட அளவிலான தேர்வுக்குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான தேர்வுக் குழுவால் 237 பயனாளர்களுக்கு இறுதி ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது.

பயனாளி இளைஞர்களுக்கு உழவர் நல சேவை மையங்களை திறம்பட நிர்வகிக்கும் பொருட்டு 15 நாட்களுக்கு மாவட்டங்களில் உள்ள உழவர் பயிற்சி நிலையம் / வேளாண்மை அறிவியல் நிலையங்களில் உரிய பயிற்சிகள் அளிக்கப்படுவதுடன், 10 இலட்சம் ரூபாய் முதல் 20 இலட்சம் ரூபாய் வரையிலான மதிப்பீட்டில் உழவர் நல சேவை மையங்கள் முறையே 300 சதுர அடி மற்றும் 600 சதுர அடி கார்பெட் பரப்பில் அமைத்திட 30 சதவீத மானியமாக 3 இலட்சம் ரூபாய் முதல் 6 இலட்சம் ரூபாய் வரை இரண்டு தவணைகளாக வழங்கப்படும்.

இம்மையங்களில் உழவர்களுக்குத் தேவையான விதைகள், உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்கள் விற்பனை செய்யப்படுவதோடு, வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும். பயிர்களில் ஏற்படும் பூச்சி, நோய் மேலாண்மைக்குத் தேவையான ஆலோசனைகளும் வழங்கப்படும். மேலும், சிறிய இயந்திரங்கள் மற்றும் அதன்மூலம் இயங்கக்கூடிய வேளாண் இயந்திரங்கள், கருவிகள் போன்றவை அரசு நிர்ணயித்த வாடகையிலும், டிரோன்கள் மூலம் பயிர்பாதுகாப்பு மருந்துகள் தெளிப்பு சேவைகளும் வழங்கப்படுவதுடன், நவீன தொழில்நுட்பங்கள், வேளாண் விளை பொருட்களை மதிப்புக்கூட்டுதல் குறித்த ஆலோசனைகளும் வழங்கப்படும். விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், வங்கிகளில் கடன் பெறுதல் போன்ற நடைமுறைகள் குறித்த வழிகாட்டுதல்களை வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், வேளாண்மைப் பொறியியல் ஆகிய துறை அலுவலர்கள் இளைஞர்களுக்கு வழங்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தில் அதிக அளவில் வேளாண் பட்டம் / பட்டயம் படித்த 20 முதல் 45 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் இணைய வேண்டும் என்றும், ஆர்வமுள்ள இளைஞர்கள் விரிவான திட்ட அறிக்கையுடன் வங்கிகளில் கடன் ஒப்புதல் பெற்று *https://www.tnagrisnet.tn.gov.in/KaviaDP/register* எனும் இணையதள முகவரியில் விண்ணப்பித்து பயனடைவீர்!

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

### சென்னை மாவட்டம் -– சிறப்பு தீவிரத் திருத்தம் (S I R) – 2026

# அனைத்து மையங்களிலும் வாக்காளர் உதவி மையங்கள்!

## சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் தகவல்!

சென்னை, நவ.18-

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி, பொதுத் தேர்தல்களுக்கான சிறப்பு தீவிரத் திருத்தம் - 2026 பணிகள் சென்னை மாவட்டத்தில் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்குசாவடி நிலை அலுவலர்கள் (Booth Level OfficersBLOs) வீடு வீடாக சென்று வாக்காளர்களுக்கு கணக்கீட்டுப் படிவங்களை (Enumeration Forms) வழங்கி நிரப்பப்பட்ட படிவங்களை மீண்டும் பெற்று வருகின்றனர்.

இந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, கணக்கீட்டுப் படிவங்களை பூர்த்தி செய்வதில் வாக்காளர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு தீர்வு காணும் வகையிலும், வாக்காளர்கள் மற்றும் அவர்களது உறவினர் பெயர்கள் 2005ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்ற விவரங்களை கண்டறியவும், வாக்காளர்களுக்கு உதவும் வகையிலும், 18.11.2025 முதல் 25.11.2025 வரை எட்டு நாட்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து (947) வாக்குச்சாவடி மையங்களிலும், வாக்காளர் உதவி மையங்கள் செயல்பட உள்ளன.

இப்பணிகளை வெற்றிகரமாக மேற்கொண்டு முடிக்க அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் வாக்குச்சாவடி நிலை முகவர்களின்(Booth Level AgentsBLAs) பங்கானது இன்றியமையாதது.

அரசியல் கட்சிகளின் முழுமையான பங்களிப்பை உறுதி செய்யும் வகையில் இந்திய தேர்தல் ஆணையம் கடந்த அக்டோபர் 27 ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள வழிகாட்டுதல்கள்படி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி முகவர்கள், வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீட்டிற்கு முன்பு வரை நாள்தோறும் அதிகபட்சம் 50 எண்ணிக்கையிலான நிரப்பப்பட்ட கணக்கீட்டுப் படிவங்களை பெற்று வழங்க அனுமதித்துள்ளது.

அவ்வாறு படிவங்களை சமர்ப்பிக்கும் போது வாக்குச்சாவடி முகவர்கள் கீழ்கண்ட உறுதிமொழியையும் இணைத்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் அளிக்கவேண்டும்.

“ என்னால் வழங்கப்படும் இந்த தகவல்கள் அனைத்தும் என் பாகத்திற்கு உட்பட்ட வாக்காளர் பட்டியல் உடன் சரிபார்க்கப்பட்டது என உறுதியளிக்கிறேன் எனவும், மேலும் தவறான தகவல்கள் அளிப்பது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1950, பிரிவு 31 -ன் படி தண்டனைக்குரியது என்பதையும் நான் அறிவேன்”

வாக்காளர் உதவி மையங்கள் செயல்படும் தேதிகள்:

1. 18.11.2025 (செவ்வாய்கிழமை)
2. 19.11.2025 (புதன் கிழமை)
3. 20.11.2025 (வியாழக்கிழமை)
4. 21.11.2025 (வெள்ளிக்கிழமை)
5. 22.11.2025 (சனிக் கிழமை)
6. 23.11.2025 (ஞாயிற்றுக்கிழமை)
7. 24.11.2025( திங்கட்கிழமை)
8. 25.11.2025(செவ்வாய்கிழமை)

மேற்கண்ட எட்டு நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை வாக்காளர்களுக்கான சேவைகள் வழங்கப்படும் எனவும், மேற்படி வாக்காளர் உதவி மையங்களில் (Electors Help Desk) சம்மந்தப்பட்ட பகுதி வாக்காளர்கள் விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டுதல்களை பெறலாம் எனவும், மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுடன் ஒருவர் துணையாக வரலாம் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

வாக்காளர் உதவி மையங்களில் வழங்கப்படும் சேவைகள் பின்வருமாறு:

1. சிறப்பு தீவிரத் திருத்தத்திற்கான கணக்கீட்டுப் படிவங்களை பூர்த்தி செய்வதில் வாக்காளர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு தீர்வு காணும் வகையில் வழிகாட்டுதல்.
2. கணக்கீட்டுப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் குறித்து விளக்கங்கள் வழங்குதல்.
3. கணினி வசதி மூலம் வாக்காளர் விவரங்களை உடனடியாகச் சரிபார்த்து வழங்குதல்.

இந்த எட்டு நாட்கள் வாக்காளர் பட்டியல் திருத்தத்தின் முக்கிய செயல்பாட்டு நாட்கள் என்பதால், வாக்காளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்தி பயன் பெறுமாறு சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், தெரிவித்துள்ளார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் ஆகியோர் நேற்று (17.11.2025) மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் 2.50 கோடியாவது பயனாளியான தஞ்சாவூர் மாவட்டம், தென்னங்குடி பகுதியில் வசிக்கும் திருமதி.மனோன்மணியை, வயது 56 நேரில் சென்று சந்தித்து நலம் விசாரித்து மருந்துப் பெட்டகத்தினை வழங்கினார்கள்.